## சாமந்தி பூ சாகுபடியில் வெற்றி கண்ட விவசாயி

**முனைவர். ம.அ.வெண்ணிலா முனைவர்.க.இந்துமதி மற்றும் முனைவர்.பா.ச.சண்முகம**

தருமபுரி மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர்கள் அதிகம் சாகுபடி செய்யப்படுகின்றது. காய்கறிகள் பழங்கள் மற்றும் பூ வகைகள் பயிரிடப்படுகின்றன. இதில் பூ வகை பயிர்களில் முக்கியமான சாமந்தி சுமார் 517 ஹெக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகின்றது. இது வருடம் முழுவதும் பயிரிடப்பட்டாலும் பண்டிகை மற்றும் விழாக்காலங்களில் இதற்கு அதிக தேவை உள்ளது. இந்த சாமந்தி பூ சாகுபடியில் வெற்றி கண்ட விவசாயி திரு.கோபால் த/பெ. திருப்பதி, உச்சம்பட்டி கிராமம், காரிமங்கலம் வட்டாரம், தருமபுரி மாவட்டம் அவர்கள் தனது அனுபவங்களை இங்கே பகிர்ந்து கொள்கிறார்.

**இரகம் :** இரவி கிரண் மற்றும் மேரி கோல்டு இரகங்களை பயிரிட்டேன்.

**நடவு பருவம் :** நவம்பர் - டிசம்பர்

**மண்ணின் தன்மை**

நல்ல வடிகால் வசதியுள்ள மணற்பாங்கான செம்மண் ஆதலால் சாமந்தி வளர ஏதுவாக இருக்கும்.

**வேர்குச்சிகள் தயார் செய்தல்**

சாமந்தி வேர்குச்சிகள் சுமார் 44000 ஒரு எக்டர் நடவு செய்ய தேவைப்பட்டது. இந்த வேர்குச்சிகளை கார்பண்டாசிம் 1 லிட்டர் தண்ணீருக்கு ஒரு கிராம் என்றளவில் கரைசலில் நுனியை நனைத்து வேர்குச்சிகளை நேர்த்தி செய்தேன்.

**நடவு வயல் தயாரிப்பு**

நடவு வயலை நன்கு உழுது 15 டன்கள் தொழு உரம் இட்டு பின்பு 200 கிலோ சூப்பர் பாஸ்பேட் இடப்பட்டது.

நான்கு அடி அகலமுள்ள மேட்டுப்பாத்திகளை ஒரு அடி உயரத்தில் அமைத்து அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபாக்டீரியா முறையே 2 கிலோவும் சூடோமோனாஸ் 2.5 கிலோவினை 50 கிலோ தொழுஉரத்துடன் கலந்து மேட்டுப்பாத்திகளில் இடப்பட்டது. சொட்டு நீர் பாசன குழாய்கள் அமைத்து பின்பு மேட்டுப்பாத்திகளில் சில்வர் நிற நெகிழி நிலப்போர்வை அமைக்கப்பட்டது. மேட்டுப்பாத்தி முழுவதும் நனையும்படி சொட்டு நீர் பாசனம் மூலம் நீரால் நனைத்தேன்.

**நடவு செய்தல் மற்றும் செடி இடைவெளி**

நேர்த்தி செய்யப்பட்ட விதைக்குச்சிகளை இரண்டு வரிசை முறையில் 90x60x30 செமீ என்ற இடைவெளியில் இரண்டு வரிசை முறையில் மேட்டுப்பாத்திகளில் நடவு செய்தேன்.

**களை மேலாண்மை**

நெகிழி நிலப்போர்வை அமைத்ததால் களை மேலாண்மை செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

**நீர்வழி உரப்பாசனம்**

19: 19 : 19 12: 61: 00 மற்றும் யூரியா ஆகியவற்றை முறையே 2 கிலோ 1.5 கிலோ மற்றும் 8 கிலோ என்றளவில் நடவு செய்த 5 அம் நாள் முதல் 3 நாட்கள் இடைவெளியில் பயிரின் முதல் அறுவடை வரை (4 மாதம் வரை) நீர் வழி உரமாக அளித்தேன்.

**அறுவடை**

நடவு செய்து மூன்று மாதங்களில் பூக்கள் அறுவடைக்கு வரும் நன்கு விரிவடைந்த பூக்களை மாலை நேரங்களில் பறிக்க வேண்டும்.

**வரவு செலவு**

| | | |
|---|---|---|
| உழவு மற்றும் நிலம் தயாரிப்பு | : | 3000 |
| வேர்குச்சிகள் (4.25/ குச்சி x 10000 குச்சிகள் | : | 42500 |
| நெகிழி நிலப்போர்வை அமைக்க | : | 20000 |
| உர மேலாண்மை | : | 12000 |
| பயிர் பாதுகாப்பு | : | 1500 |
| அறுவடை | : | 12500 |
| போக்கு வரத்து | : | 9000 |
| **மொத்தம்** | : | **102500** |

**வருமானம்**

| | | |
|---|---|---|
| மகசூல் | : | 3 டன்கள் |
| மொத்த வருமானம் | : | 300000 |
| **நிகர வருமானம்** | : | **197500** |

ஒரு ஏக்கரில் சாமந்தி சாகுபடி செய்யும் போது நிகர வருமானம் சுமார் இரண்டு இலட்சம் வரை கிடைக்க வாய்ப்புள்ளது. இது சராசரியாக உள்ள வருமானம் ஆகும். பண்டிகை மற்றும் விழாக்காலங்களில் இன்னும் அதிக வருமானம் பெற வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் இத்தகைய வருமானம் தரக்கூடிய மலர்ப்பயிரினை சாகுபடி செய்து பயன் பெறலாம்.

